STR-6-TA

# வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 6

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின புத்தகம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிரவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னறிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீதிருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் அற்புதமான வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். Dr. ஜிம்மி அவர்கள் இந்த வெளிப்படுத்தின விசேஷத்தில் நம்மை படிப்படியாக நடத்திக்கொண்டு வருகிறார், அதை இன்றைக்கு திரும்பவும் பார்க்க இருக்கிறோம். அதோடு அவர் உங்களோடு பகிர்ந்துகொண்டவற்றில் உங்களுக்கு இருக்கும் சில கேள்விகளுக்கும் அவர் பதிலளிக்க இருக்கிறார். சரி, ஜிம்மி, இப்போது துவங்கிடலாம். இந்த 3 விஷயங்களை இங்கே வைத்திருக்கிறீர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் அட்டவனையை எங்களுக்கு

கூறியிருந்தீர்கள். இவற்றை வைத்து சொல்லுவதன் மூலம் மக்கள் எளிமையாக புரிந்துகொள்ளுபடி பெரிதும் உதவுகிறீர்கள் என நம்புகிறேன் தொடர்ந்து, சொல்லுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் அதிகாரக இயேசுகிறிஸ்துவின் தன்மையையும் வல்லமையையும் கூறுகிறது. அந்த அதிகாரத்தில், பார்க்கும்போது, இயேசுகிறிஸ்துவின், முடி வேன்மையாயிருக்கிறது, அவர் கண்கள் அக்கினி சுவாளையாயிருக்கிறது, அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இறைச்சல்போலிருகிறது. அவரது கால்கள் உலைக்களத்தில் காய்ந்த வெண்கலம் போலிருக்கிறது, அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப்போல் இருக்கிறது, அவருடைய கரத்தில் 7 நட்சத்திரங்கள் இருக்கிறது, ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக்கொண்டிருக்கிறார். மேலும், அந்த நட்சத்திரங்கள் ஏழு சபைகளின் தூதர்களும், 7 பொன் குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாக இருக்கிறது. இதுதான் முதல் அதிகாரம். கிறிஸ்துவின் வல்லமை, சொல்வது, வசனம் 18: “மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் நான் உயிரோடிருக்கிறேன்.”

அடுத்தது 7 சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களை வெளிப்படுத்தல் 2 மற்றும் 3ம் அதிகாரங்களில் பார்த்தோம். 7 சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட ஏழு சபைகளுக்கான கடிதங்கள் அவை இயேசு கிறிஸ்துவிடமிருந்து வந்த விசேஷித்த செய்தி, சபைக்கு கிறிஸ்து உரைக்கும் கடைசி வார்த்தைகளை, அந்த 7 சபைகளுக்காண 7 கடிதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது, அவை கி பி 95ல் ஆசியாவிலிருந்த உண்மையான சபைகள். அவைகள் சபை காலத்தை கூறுவதாக இருந்தது, அவைகள் உண்மையான சபைகள், இது எபேசு தியத்தீரா சர்தை லவோதிக்கேயாவை மட்டும் குறிக்கவில்லை, இன்றைக்கு உயிரோட்டத்துடன் இருக்கும் சபைகளையும் குறிக்கிறது.

4ம் அதிகாரம், வெளிப்படுத்ஹ்டின விஷஷத்தின் முக்கிய நிகழ்வுகளில் முதல் காரியத்தை இதில் பார்க்கிறோம், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், 4ம் அதிகாரம் வசனம் 1. யோவானுக்கு அந்த சத்தம், பரலோகத்திலிருந்து ஏறிவா என்று சொல்லும் எக்காள சத்தத்தை போல இருந்ததாம். 5 ம் அதிகாரம், தூதர்களின் கூட்டம் ஆர்ப்பரித்து, பாடுகிறார்கள், “ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்.” 5ம் அதிகாரம், 12 வசனம் அதை கூறுகிறது. 6ம் அதிகாரம், 3 அடுக்கான 7 நியாயதீர்ப்புகள் ஆரம்பமாகிறது, மொத்தம் 7 முத்திரை நியாயதீர்ப்பு, 7 எக்காள நியாயதீர்ப்பு, 7 கலச நியாயதீர்ப்பு: 21 நியாயதீர்ப்புகளும் ஏழு வருட உபத்திரவ காலத்தில் அதிக கொடூரமானதாக தொடர்ந்துகொண்டே இருக்கும்.

முதல் மூன்றரை ஆண்டு காலத்தில், கள்ளத்திருச்சபையின் பின்னால் இருந்து செயல்படும். வெளிப்படுத்தல் 17ம் அதிகாரம். முதல் முத்திரை உடைக்கப்படும், அந்திகிறிஸ்து உதயமாவான். வெள்ளை குதிரையின் மேல் ஏறியிருப்பவன், தலையில் கிரீடம் இருக்கும், கையில் வில் இருக்கும், அம்புகள் இருக்காது, அதாவது அவன் 7 ஆண்டு உபத்திரவ காலத்தின் துவக்கத்தல் சமாதானத்தை உறுதிபடுத்திடுவான். அதாவது, அவன் சமாதானத்தை உறுதிபடுத்தும்போது, தானியேல் 9:27ல் சொல்லப்பட்டபடி, அது 7 ஆண்டு உபத்திரவ காலத்திற்கு துவக்க மனியோசையாகவே இருக்கும். இரண்டாம் முத்திரை உடைக்கப்பட சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருப்பவன்

வருவான். அது தேசங்கள் ஒன்று திராண்டு வருவதாகும் :அதில் நாம் பார்த்தவை ரஷ்யா, ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், எத்தியோபியா, சோமாலியா, சூடான், சீரியா, எகிப்து, துருக்கி. அதோடுகூட சவூதி அரேபியா லீபனோனை பார்த்தோம். இந்த தேசங்கள் அனைத்தும் யூத தேசமான இஸ்ரேலுக்கு விரோதமாக படையெடுக்கும் என்பதை பற்றியும் பார்த்தோம். இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் நேரத்தில் அதற்க்கான முயற்சி நடப்பதை பார்க்கமுடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சொல்லப்பட்ட தேசங்கள் இதுதான் என்று எப்பாடு உங்களால் தெளிவாக கூற முடியும்?

**Dr. ஜிம்மி டியோங்**: ஏனென்றால் வேதாகமம் குறிப்பிட்ட இடங்களை நமக்கு எடுத்துரைக்கிறது. இஸ்ரேலை தாக்க ஆரம்பிக்கும் முதல் 2 தேசங்களை பற்றி நான் கூறினேன், சீரியா மற்றும் எகிப்து, அது தானியேல் 11: 40- 45. மற்ற தேசங்களை பற்றி எசேக்கியேல் 38மற்றும் சங்கீதம் 83ல் பார்க்கலாம். தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்டிருக்கும் இந்த அதிகாரங்கள் கடைசி நாட்களில் இஸ்ரேலுக்கு விரோதமாக வர இருக்கும் தேசங்களின் பெயர்களையும் செயல்களையும் கூறுகிறது.

மீதமுள்ள முத்திரைகளின் நியாயதீர்ப்பு பூமியின் மேல் வந்திடும், அதில் பூமியில் நான்கில் ஒருபங்கினர் கொல்லப்படுவார்கள், பசிகொடுமை தலைவிரித்தாடும், பல இடங்களில் பூமி அதிர்ச்சி உண்டாகும், விசுவாசிகள் இரத்தசாட்சியாக மரிப்பார்கள் – கிறிஸ்தவர்கள் அல்ல, ஏனென்றால் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் சென்றிடுவார்கள், அவர்கள் உபத்திரவ காலத்தில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், எப்படி கிறிஸ்துவிடம் திரும்புவார்கள்?அப்போது பிரசிங்கிக்கும்படியாக 2 சாட்சிகள் இருப்பார்கள். இதை நாம் 11 அதிகாரம், 3ம் வசனத்திலிருந்து வெளிப்படுத்தல் 11 அதிகாரம், 13 வரை பார்க்கிறோம். இந்த 2 சாட்சிகளும் பிரசங்கிபார்கள். அது எலியா மற்றும் ஏனோக்கு என நம்புகிறேன், அவர்கள் மரிக்கவில்லை, அவர்கள் உண்மையில், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள், அவர்கள் திரும்பி வருவார்கள். எபிரேயர் 9:27 சொல்வதுபோல, அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயதீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது."

கடைசி மூன்றரை ஆண்டுகள், பாபிலோனில் நடக்கும் சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் பின்னணியாக இருக்கும். அதாவது, கள்ளத்திருச்ச்சபை அழிக்கப்பட்டவுடன், அந்திகிறிஸ்து ரோமைவிட்டு வெளியேரிடுவான், இத்தாலி, அங்கதான் கள்ளத்ஹ்டிருச்ச்சபை இருக்கும், அவன் எருசலேமிற்கு சென்றிடுவான், ஆலயத்திற்குள் நுழைந்து, உட்கார்ந்து, தன்னை தேவனென்று சொல்லி எருசலேமில் இருந்து சென்றிடுவான். கள்ளத்தீர்க்கதரிசி, சாத்தானின் திருத்துவத்தில் ஒரு நபராக இருப்பவன், அந்திகிறிஸ்துவின் சிலையை நிறுத்திடுவான். அற்புதங்கள் அடையாளங்கள் மற்றும் அதிசயங்கள் மூலமாக பேசி மக்களை அசைத்திடுவான். அதற்கிடையில், அந்திகிறிஸ்து பாபிலோன் பட்டணத்திற்குள் பிரவேசித்திடுவான், அது ஐப்பிராத்து நதியின் கடற்கரையில் இருக்கிறது, பாக்தாத்திலிருந்து சுமார் 58 மைல் தூரத்தில் உள்ள, ஈராக். அங்குதான் 4500 ஆண்டுகளுக்கு முன்பு நிம்ரோத் ஒரே உலக பொருளாதாரம், அரசியல்,

அரசாங்க அமைப்பை, நிறுவியபோது பாபிலோன் இருந்தது அது  கடைசி நாளில் நடப்பவைகளுக்கு மாதிரியாக இருந்தது.

உபத்திரவ காலத்தின் பின்பாதியான மூன்றரை ஆண்டுகள், பாபிலோனில் நடப்பவைகளை பின்ணனையாக கொண்டு 7 எக்காள நியாயதீர்ப்பும் 7 கலச நியாயதீர்ப்பும் நிறைவேறும். மேலும் 7 எக்காள நியாயத்தீர்ப்பின் பொது, பூமியின் பொருளாதாரத்தை பாதிக்கும் நியாயதீர்ப்புகள் நிறைவேறும். சமுத்திரம் 3ல் ஒரு பங்கு இரத்தமாகும், கடலின் மீன்களில் 3ல் ஒரு பங்கு, செத்துப்போகும். கடலின் அலைகளில் இருக்கும் கப்பல்களில் 3ல் ஒருபங்கு அழிந்துபோகும். புல் எரிந்துபோகும், மரங்கள் எரிந்துவிடும். எக்காள நியாயதீர்ப்பு உண்டாகும் காலங்களில் பூமியின் மேல் கொடூரமான நியாயதீர்ப்பு உண்டாகும். ஐந்தாவது வெளிப்புரத்ஹ்டிளிருந்து ஊடுறுவும் காரியங்கள் இருக்கும், பாதாளக்குழயில் இருந்து திறந்துவிடப்படும் பிசாசுகள், வேதம்கூருகிறது வெட்டுக்கிளிகள் போல வரும், வித்தியாசமான வெட்டுக்கிளி, இதுவரை பார்ஹ்த்டிராத ஒன்று, மனித முகம், பெண்ணின் கூந்தல், சிங்கத்தின் பற்கள், யுத்தகளத்தில் இருக்கும் குதிரையின் மார்பு, பாம்பின் வால். அவைகள் புறப்பட்டு வந்து பூமியின் ஜனத்தொகையில் 3ல் ஒரு பங்கை கொன்றுபோடும். நான்காவது முத்திரை நியாயதீர்ப்பில் நான்கில் ஒருபங்கினர் கொல்லப்பட இப்போது ஆறாது எக்காள நியாயதீர்ப்பில், 3ல் ஒருபங்கினர் கொல்லப்படுவார்கள், பூமியி ஜனத்தொகையில் பாதி அழிந்துவிடும்.

இப்போது கடைசி நியாயதீர்ப்புகளை பார்க்கப்போகிறோம், கடைசியான 7 நியாயதீர்ப்புகள், 7 கலச நியாயதீர்ப்பு, அதுவும்சீக்கிரத்தில் சம்பவிக்கும். சமுத்திரம் முழுவதும் இரத்தமாகும், எல்லா மீன்களும் செத்துப்போகும், சூரியன் அதிக வெப்பமாகி ஜனங்கள் தங்கள் பார்க்கலை கடித்துக்கொள்ளும் அளவிற்கு சூரியன் அவர்களை தகித்தத. ஆனாலும் கிறிஸ்துவின் பக்கம் திரும்பவில்லை, தேவனை தூஷிக்கிறார்கள். 16ம் அதிகாரம் 12ம் வசனம், ஐப்பிராத்து நதி வற்றிப்போகிறது. அது மத்திய கிழக்கிற்கும் கிழக்கு பகுதிக்கும் எல்லையாக இருக்கிறது, கிழக்கிலிருந்து ராஜாக்கள் வர அது வழியை திறந்து கொடுக்கும். நாம் இந்தியாவையும் சீனாவையும் குறித்து பேசிக்கொண்டிருகிறோம், இதுதான் உலக மக்கள்தொகையில் பாதியை கொண்டிருப்பவை, இன்றைக்கும் அப்படிதான். வெல், இந்த சம்பவம் பாபிலோனின் அழிவிற்கு பிறகு சம்பவிக்கும், பாபிலோன் நகரம். அதுதான் தலைமையகமாக இருக்கும் அகிலஉலக, பொருளாதாரம், அரசியல், அரசாங்க அமைப்புகள், அந்திகிறிஸ்து நிறுவியவற்றிற்கு, பாபிலோன் தலைநகரம். பாபிலோன் இதுவரை அழிக்கப்படவில்லை. பாபிலோன் சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டது. பாபிலோன் நகரம் இதுவரை அழிக்கப்படவில்லை. ஏசாயா 13 மற்றும் 14, எரேமியா 50 மற்றும் 51, வெளிப்படுத்தின விசேஷம், 18ம் அதிகாரம் வசனங்கள் 10,17 மற்றும் 19, கூறுகிறது ஒரு நாழிகையில் பலமான பட்டணம், மகா நகரமாகிய பாபிலோன், சர்வதேச, பொருளாதாரம், அரசியல், அரசாங்கத்திற்கு தலைமையகமாக இருந்தது தர்க்கப்பட்டதே என்பார்கள்.

அதற்கு பிறகு இயேசுகிறிஸ்து பூமிக்கு திரும்ப வருவார். சகரியா 14:4 கூறுகிறது இயேசுகிறிஸ்து எருசலேம் நகரத்தின் ஒலிவ மலையில் வந்து இறங்குவார். அந்த சமயத்தில், உலக சேனைகள் அனைத்தும், சகரியா 14:2, எருசலேமில் கூடிடுவார்கள். வெளிப்படுத்தல் 16:13-60 கூறுகிறது சாத்தானின் திரித்துவம் – சாத்தான், அந்திகிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி – அற்புதங்களையும் அடையாளங்களையும் அதிசயங்களையும் நடப்பித்து பூமியின் சேனைகளை எருசலேமில் கூட்டி சேர்ப்பான், இது அர்மகேதொன் யுத்தத்திற்கு துவக்கமாக பாலமிரங்குவார்கள், யுத்தம் நடக்காது, ஆனால் அதற்க்கு கூடிடுவார்கள்.

இயேசுகிறிஸ்து தமது ஆலயத்தை கட்டிடுவார். எசேக்கியல் 40 -46, ஆயிர வருட அரசாட்சியில் மேசியாவின் ஆலயம் ஆலய பர்வதத்தில் நிற்கும் என்று சொல்லப்படுகிறது. இதற்கிடையில், உலக சேனைகள் அனைத்தும் எஸ்ரேயேல் பள்ளத்தாக்கிற்கு சென்றிடும், பர்வதங்களின் பள்ளத்தாக்கு, இந்த பள்ளத்தாக்கை சுற்றி எல்லா பர்வதங்களும் இருக்கிறது. உலகிலேயே எஸ்ரேயேல் பள்ளத்தாக்குதான் நேர்த்தியான யுத்தகளம் என்று நெப்போலியன் கூறியிருக்கிறார். வெல், அவர்கள் அங்கே கூடுவார்கள், இயேசுகிறிஸ்துவும் அங்கு வருவார், அவர்கள் மாண்டுபோவார்கள். அவர் இரத்தத்தின் பள்ளத்தாக்கை கடந்து வருவார், இதை வெளிப்படுத்தல் 14:19-20ல் பார்க்கிறோம், அங்கிருந்து அவர் பெட்ரா வரைக்கும் போவார். வெளிப்படுத்தல் 12:6 கூறுகிறது கடைசி மூன்றரை ஆண்டு காலத்தில் யூத ஜனங்களை பாதுகாக்கும் படி தேவன் ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அதுதான் பெட்ரா என நம்புகிறேன். அவர் அங்கு சென்று, யூதர்களை கூட்டி சேர்த்து, யோர்தான் பள்ளத்தாக்கை அவர்களை கடக்கப்பண்ணி, ஒலிவ மலையின் பின்பக்கமாக அழைத்துவந்து, கிதரோன் பள்ளத்தாக்கை கடந்து தேவாலய பர்வதத்திற்கு அழைத்து வருவார், ஆலயத்திற்கு அழைத்து வருவார். பின்பு அவர் தமது ராஜ்யத்தை நிறுவிடுவார், 1000 வருடங்கள் கொண்ட ஆயிராண்டு அரசாட்சி.

இப்போது அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அர்மகேதொன் யுத்தத்தின் முடிவில் அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள். இயேசுகிறிஸ்து ஒரு தூதனை நியமித்து சாத்தானை, கட்டி பாதாளக்குழயில் ஆயிர வருடங்களுக்கு கட்டி அவனை சிறைபிடுத்து வைக்க கட்டளையிடுவார். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் ஆளுகை செய்திடும் ஆயிர வருடங்களுக்கு சாத்தான் இப்படியாக கட்டப்பட்டவனாக இருப்பான். ஆயிர வருடங்களின் இறுதியில், சாத்தான் சில காலத்திற்கு தன காவலில் இருந்து விடுதலையாகி இயேசுகிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றாமல் இருக்கிறவர்களை, ஆயிர வருட அரசாட்சியில் இருந்தவர்களை கூட்டி சேர்ப்பான்.

அவர்கள் மறுபடியுமாக எருசலேம் நகரத்தை முற்றிகையிட்டு இயேசுகிறிஸ்துவை வெல்ல முயற்சித்திடுவார்கள். அப்போது தேவன் சாத்தானை நசுக்கி, அவனை அக்கினி கடலில் எறிந்திடுவார், அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அங்குதான் இருக்கிறார்கள். அடுத்தது பரிதாபமான நிலை, பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, இயேசுகிறிஸ்து அதின் நியாயாதிபதியாக இருப்பார். தன்னை நிராகரித்த அனைவருக்கும் அக்கினி

கடலில் தள்ளப்படும் தண்டனையை அளித்திடுவார், அதுதான் இரண்டாம் மரணம். அதற்கு பிறகு, நித்திய வாழ்வு: புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். திரும்ப வந்ததும், சிலவற்றை குறித்து பார்க்க இருக்கிறோம், ஜனங்கள் கேட்க்கும் முதல் கேள்வி, விசுவாசிகள் அல்லாத குழந்தைகளை பற்றி என்ன, எடுத்துக்கொள்ளப்படுதலில் அவர்கள் நிலை என்ன? எனவே நேயர்களே, தொடர்ந்து இணைந்திருங்கள் மீண்டும் சந்திப்போம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட் மீண்டும் வரவேற்கிறோம், நாம் இப்போது Dr. ஜிம்மி டியோங் உடன் பேசிக்கொண்டிருக்கிறோம், வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஜனங்கள் கேட்கும் முதல் கேள்வி என்னவென்றால், விசுவாசிகளாக இல்லாத குழந்தைகளுக்கு என்னவாகும், அவர்கள் தனித்து முடிவெடுக்கும் வயதை அடையாதபோது, அவர்களுக்கு, எடுத்துக்கொள்ளப்படுதலில் என்ன சம்பவிக்கும்?

**Dr. ஜிம்மி டியோங்**: என்ன நடக்கும் என்று நமக்கு தெரியாது. சரியான பதிலை கொடுப்பதற்கு தேவனுடைய வார்த்தையில் எந்த ஆதாரமும் இல்லை. அநேக தாய்மார்கள், அநேக பாட்டிமார்கள், தீர்க்கதரிசன கேள்வி பதில் பகுதியில் இந்த கேள்வியை கேட்டிருக்கின்றனர். 2 விதமாக அவர்களுக்கு பதில் அளித்திடுவேன்: முதலாவதாக, தாவீது ராஜா கூறுகிறார், அவனுடைய குமாரன் மரித்தபோது, “நான் அவனிடம் செல்வேன் அவன் என்னிடம் வரப்போவதில்லை.” இதிலிருந்து, அவனுடைய சிறுபிள்ளை பரலோகத்திற்கு சென்றிருக்கிறான் தாவீதும் அங்கு சென்று அவனோடு இருப்பான் என்பது புலப்படுகிறது. எனவே, நமக்கு உறுதியான, நிச்சயம் இருக்கிறது, எடுத்துக்கொள்ளப்படுதலின் பொழுது, தாயின் கர்ப்பத்தில் இருக்கும் பிள்ளைகள் கூட, எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அது முதல் காரியம், இரண்டாவதாக, மத்தேயு 18 கூறுகிறது, “அப்பொழுது இயேசு, சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு தடைபண்ணாதிருங்கள் என்றார்.”சிறு பிள்ளைகளை அவர் நேசித்தார். அவர்களை காக்கும்படி தூதர்களை ஏற்படுத்தியுள்ளார். சிறுபிள்ளைகளுக்கு என்ன நடந்தாலும் சரி இயேசு அவர்களை அதிகமாக நேசிக்கிறார், அவர்களை காத்துக்கொள்வார். அவர்களை குறித்து கவலை பட அவசியமில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். எடுத்துக்கொள்ளப்படுதலை குறித்த இஈண்டாம் கேள்வி, சிலர் சுவிசேஷத்தை குறித்து கேள்விப்பட்டிருக்க அவர் தேவனை ஏற்றுக்கொள்ளும் பயணத்தில் வந்துகொண்டிருக்கிறார்கள் ஆனால் இன்னும் முழுமையடையவில்லை. எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கிறது, கிறிஸ்தவர்கள் போய்விட்டனர் இந்த நபர் தனித்து விடப்பட்டார். உபத்திரவ காலத்தில் அவர்களுக்கு இரண்டாம் வாய்ப்பு கிடைக்குமா?

**Dr. ஜிம்மி டியோங்**: மூன்று படிகளை கடந்து வந்தவர்களுக்கு உபத்திரவ காலத்தில் இரண்டாம் வாய்ப்பு இருப்பதாக எனக்கு நம்பிக்கை இல்லை: முதல் படி, சுவிசேஷத்தை கேட்டனர், இரண்டாவது, அதை புரிந்துகொண்டார்கள், மூன்றாவது, சுயசித்தத்தின்படி அதை நிராகரித்துவிட்டனர். 2 தெசலோனிக்கேயர் 2:8-12 கூறுகிறது சுவிசேஷத்தை கேள்விப்பட்டும் அதை நன்கு விளங்கிக்கொண்டும், சத்தியத்தை விசுவாசியாமல் இருக்கும் யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். இரண்டாம் சந்தரப்பம் அளிக்கப்படாது. ஆனா அநேக ஜனங்கள் அப்படிதான், ஜான், உபத்திரவ காலத்தில் 2 சாட்சிகளை பிரசிங்கிக்கப்படும் ராஜ்யத்தின் சுவிஷேச்ஷத்தை கேள்விப்படுவார்கள், 144,000 யூத ஆண்கள், அவர்கள் சுவிசேஷத்தை உலகில் பிரஸ்தாபப்படுத்துவார்கள், அந்த ஏழு வருட உபத்திரவ காலத்தில், பூமியில் உள்ள ஒவ்வொருவருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள சந்தரப்பம் பெறமுடியாமல் இருப்பவர்கள் யாரென்றால், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு, சுவிசேஷத்தை, கேட்டு அறிந்துகொண்டு அதை புறக்கணித்தவர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சிலர் சொல்லுகிறார்கள், ஜிம்மி, எடுத்துக்கொள்ளப்படுதல் உபத்திரவ காலத்தின் மத்தியில் வந்திடுமாம். சிலர் உபத்திரவ காலத்தின் இறுதியில் என்கிறார்கள். நீங்க ஏன் உபத்திரவ காலத்திற்கு முன்பாக நடக்கும் என்று வேதம் போதிக்கிறதென நம்புகிறீர்கள், கிறிஸ்தவர்கள் வரப்போகிற எந்த வாதையையும் சந்திக்க போவதில்லையா? அதற்கான வேத ஆதாரம் என்ன?

**Dr. ஜிம்மி டியோங்**: வெளிப்படுத்தின விசேஷம், 3ம் அதிகாரம், 10ம் வசனம். இந்த கடிதமானது பெரியவர்கள் சிறியவர்கள் என்று பிலதெல்பியா சபைக்கு வரும் சபையினர் அனைவருக்கும் எழுத்தப்பட்ட கடிதமாகும். அதில் பார்க்கும்போது, “வரப்போகிற சோதனை காலத்திற்கு தப்பும்படி உன்னை காப்பேன், சோதனை காலம், உபத்திரவ காலம். அங்கு அதிலிருந்து தூக்கிவிடுவேன் என்று சொல்லப்படாமல் அதற்கு தப்பும்படி காப்பேன் என்றிருக்கிறது.” இதுவும் ஒரு காரணம். வெளிப்படுத்தின வேயஷேஷத்தில் சபை என்ற வார்த்தை 25 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நான்காம் அதிகாரத்திற்கு முன்பு 19 முறை வருகிறது, எடுத்துக்கொள்ளப்படுதளுக்கு முன்பு, 19ம் அதிகாரம் 11ம் வசனத்திற்கு பிறகு 6 முறை சொல்லப்பட்டிருக்கிறது, அது இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்ப வந்ததற்கு பிறகு.உபத்திரவ காலத்தில் சம்பவிப்பவைகளை பற்றி துல்லியமாக சொல்லப்பட்டிருக்கும் 16 அதிகாரங்களில் ஒரு இடத்தில் கூட சபை குறிப்பிடப்படவில்லை. ஜான், ஒருவேளை உபத்திரவ காலத்தில் நம்மை இங்கு வைக்க தேவன் மறந்திருக்கலாம் அல்லது நமக்கு அது ஏற்ற இடமாக இல்லாமல் இருக்கலாம். நாம் அதில் பங்கடைய போவதில்லை என்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. உபத்திரவ காலத்திற்கான நோக்கம் 3 நிலைகளை கொண்டுள்ளது: யூதர்களை இயேசுகிறிஸ்துவுக்கு சொந்தமாக்கிட, புரஜாதியான உலக வல்லமையை முடிவிற்கு கொண்டு வர. சாத்தானின் திரித்துவத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திட, சாத்தான், அந்திகிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி. அந்த காலத்தில் நாம் இங்கு

இருக்கப்போவதில்லை. வரப்போகிற ஆக்கினைக்கு அவர் நம்மை தப்புவித்திடுவார். அந்த ஆக்கினை வருவதற்கு முன்பே நம்மை எடுத்துக்கொள்வார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உலக வரலாற்றில் மிகப்பெரிய நாடுகளாக இருப்பவைகளுக்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள், மிகவும் வல்லமை படைத்ததான, உலகிலேயே அதிக ஐசுவரியம் நிறைந்ததான நாடு: அமெரிக்கா. அமெரிக்காவையும் கடைகாலத்தில் நடக்கப்போகிற நிகழ்வுகளையும் வைத்து பார்க்கும்போது, வேத தீர்க்கதரிசனங்களில் எந்த பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளை பார்க்கமுடியும்?

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், வேதாகம தீர்க்கதரிசனங்களின் கேள்வி பதில்களில் அதிகம் கேட்கப்படும் கேள்வி இதுதான். தீர்க்கதரிசனங்களில் அமெரிக்க தேசத்தை பற்றி சொல்லப்படவில்லை. ஒரு வேதாகம குறிப்பில் சகரியா 14:2ல், கிறிஸ்து திரும்பி வருவதற்கு முன்பு உபத்திரவ காலத்தின் இறுதியில் உலக நாடுகள் அனைத்தும் எருசலேமில் ஒன்று கூடுவார்கள் என்றிருக்கிறது. ஒருவேளை, அமெரிக்கா, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு பிறகு, இந்த பூமியில் செயல்பட்டுக்கொண்டிருந்தால், அந்த நாடுகளோடு இவர்களும் இணைந்திடுவார்கள்.

சரி, கவனியுங்கள், சில காரியங்கள் யூகிக்கப்படுகிறது, நான் நினைக்கிறேன் சபை எடுத்துக்கொள்ளப்ப்படும்போது, இந்த தேசத்தின் முதுகெலும்பு மறந்துவிடும். தடுமாற்றத்தில் இருக்கும் தேசமானது நீதிநெறியை விட்டுவிலகி, கல்வியில் மங்கிப்போய், ராணுவம் அழிந்து, பொருளாதாரத்தில் சரிந்திடும். குழந்தைகளை கொன்று வீதிகளில் சோரம்போகிரவர்களை ஆட வைக்கும் தேசம், தேவனால் நியாயந்தீர்க்கப்படும். அமெரிக்கா தனது அடிக்கல்லாக இருந்த வல்லமையில் இருந்து விழுந்து மூன்றாம், நான்காம், எட்டாம், ஒன்பதாம், பன்னிரெண்டாம் இடத்திலுள்ள தேசமாகும். ஒன்றுமில்லாமற் போவார்கள், மதிப்பற்றவர்களாய், உபத்திரவ காலத்தின் இறுதியில் நிற்ப்பார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். அந்திகிறிஸ்துவை பற்றி மக்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். அதை பற்றி பல காரியங்களை சொன்னீர்கள். முதலாவதாக, பலருடைய எண்ணம் அந்திகிறிஸ்து ஒரு யூதனாக இருப்பான். யூத வம்சத்தை சார்ந்த ஒருவன் அந்திகிறிஸ்துவாக எழும்புவான் என்று எதிர்ப்பார்க்க வேண்டியது அவசியம்தானா?

**Dr. ஜிம்மி டியோங்**: இல்ல, சர், அப்படியல்லை, அந்திகிறிஸ்துவானவன் சாத்தானால் வல்லமையளிக்கப்பட்ட புரஜாதியாக இருப்பான். தானியேல் 7:7ஐ பார்க்கும்போது, பத்து கொம்புகளை கொண்ட நான்காவது வல்லமையான புறஜாதி ராஜ்யத்தை பற்றி கூறுகிறது. வசனம் 24ல் சொல்லப்படுகிறது அது புதுப்பிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யமாகும். அந்த பத்து கொம்புகளில் இருந்து ஒரு கொன்பு எலும்பும். அது அந்திகிறிஸ்துவின் 27 பெயர்களில் ஒன்று. எனவே, அவன் புறஜாதிகளுக்குள் இருந்து வருவான். வெளிப்படுத்தல் 13றை பார்க்கும்போது, அந்திகிறிஸ்துவை பற்றி விளக்கமாக சொல்லப்பட்டிருக்கும் வேத பகுதிதான் அது, அதில் தானியேல் 7ல் சொல்லப்பட்டிருக்கும்

காரியங்களை பார்க்க முடியும். அதில் சிறுத்தையோடு ஒப்பிட்டிருப்பதை பார்க்கலாம், கரடியோடும் சிங்கத்தொடும் ஒப்பிடப்பட்டுள்ளது. 7ம் அதிகாரத்தில் தானியேல் கண்ட தரிசனத்தின் சாயல் அப்படியே இருக்கிறது. அது புறஜாதியின் ஆளுமையை குறிக்கிறது. அந்திகிறிஸ்து புறஜாதியானாக இருப்பான்.

அடுத்த கேள்வி எண்டவேன்றால், சரி, ஏன் யூதர்கள் அவனை மேசியாவாக ஏற்றுக்கொள்வார்கள். 2 தெசலோனிக்கேயர் 2:8-12 வரை பார்க்கும்போது, இரட்சிக்கப்படும்படிக்கு அன்போடு சொல்லப்பட்ட சத்தியத்தை புறக்கணித்தவர்களுக்கு, தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்புவார், அவர்கள் பொய்யை விசுவாசிப்பார்கள் என்றிருக்கிறது. எந்த யூதன், உபத்திரவ காலத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறானோ, அவன், நிச்சயம், அந்திகிறிஸ்துவை மேசியாவாகஏற்றுக்கொள்ள மாட்டான், மெய்யான கிறிஸ்துவை, மேசியாவாக ஏற்றுக்கொள்வான். அந்த சமயத்தில் இயேசுகிறிஸ்துவை நிராகரிக்கும் ஒவ்வொரு யுதனுக்கும் புரஜாதியானுக்கும், தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்பி, அவர்கள் பொய்யை விசுவாசிக்கும்படி செய்வார். அந்த பெரிய போய் என்னவென்றால் இந்த புறஜாதி தலைவனான, அந்திகிறிஸ்து தான், யூதர்களின் மேசியா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதோடு நாம் முடிக்கப்போகிறோம், உலகமெங்கிலும் உள்ளவர்களும் இங்கு அமெரிக்காவில் இருப்பவர்களும் சரி, இதை கவனமாக கேளுங்கள், உங்களை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக பார்க்கும் முன்பு இயேசுவை எப்படி நீங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள முடியும்?

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், நற்செய்தி எனபது இதுதான் இயேசுகிறிஸ்து, அற்ப்புதக்குழந்தையாக பிறந்தார், அற்ப்புதமான வாழ்க்கையை வாழ்ந்தார், ஒரு கோர மரணத்தை அவர் சந்தித்து மரித்தார், ஆனால் ஆசீர்வாதமான, அதிசயமான உயிர்த்தெழுதல் உண்டானது. அதை விசுவாசிக்கும்படியாக வந்திருக்கிறோம். எனக்கு, அன்பானவர்களே,நீங்கள் இதை விசுவாசித்தால், உங்களுக்கு இரட்சகர் தேவை என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை விசுவாசியுங்கள். உங்கள் பாவத்தை கழுவிட வந்தார் என்பதை விசுவாசியுங்கள் – அதற்காக தான் சிலுவை மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் மரணத்திலிருந்து உயிர்த்த பொழுது, அவர் தன்னை பற்றி சொன்னதையும் தன்னால் செய்யக்கூடும் என்று சொன்னதையும் நிருபித்து காட்டினார் – உங்களுக்கு நித்திய ஜீவனை தருவார். அவரை நோக்கி கூப்பிடுங்கள், எளிமையான 3 வரி ஜெபம், இயேசுவே, நான் ஒரு பாவி, இயேசுவே, நீர் பாவியை இரட்சிப்பவர், இயேசுவே, இப்போதே என்னை இரட்சியும். இப்போதே இந்த 3 வரி எளிமையான ஜெபத்தை செய்து இயேசுகிறிஸ்துவை உங்கள் தெய்வமாக இரட்சகராக ஏற்றுக்கொண்டு நித்திய நித்தியமாய், புதிய எருசலேமில் என்றென்றும் அவரோடிருங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஜிம்மி, மிகவும் அருமையாக இருந்தது, உங்களுடைய உதாரணங்கள் பயங்கரமாக இருந்தது. பலருக்கு நீங்கள் உதவியாக இருந்திருக்கிறீர்கள் என நம்புகிறேன், இதை கேட்டுக்கொண்டிருந்தவர்கள், எதிர்காலத்தை குறித்து தேவன்

கூறியிருப்பவற்றை புரிந்துகொள்ளும் விதத்தில் , வெளிப்படுத்தின விசேஷத்தை விளக்கினீர்கள். தேங்க் யூ சோ மச், நேயர்களே, இந்த காரியங்கள் அனைத்தையும் உங்கள் இருதயங்களில் பதித்துக்கொண்டு இதை பற்றி இன்னும் ஆழ்ந்து தியானிக்க துவங்கிடுவீர்கள் என நம்புகிறேன் வெளிப்படுத்தின விசேஷத்தை, தொடர்ந்து தியானித்திடுங்கள்

மதிப்பிடும்போது அது மார்ச் 30, கி பி 33ல் நிறுத்திடும்

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.